தேதி - 23.10.2025.

**Pro.OP**.15/2024

**Pw**.1 - திரு. காந்தி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அனுசரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ராமச்சந்திர கென்னடியின் தகப்பனார் பெயர் சுப்பாரெட்டி. 2ம் எதிர்மனுதாரருடைய தாத்தா பெயர் சுப்புராஜ். சுப்புராஜ்ன் தகப்பனார் பெயர் குருசாமிரெட்டியார். குருசாமிரெட்டியாரும், சுப்பாரெட்டியாரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். ராமச்சந்திர கென்னடிக்கு மேற்படி உயிலில் கண்ட சொத்துக்களை பொறுத்து உயில் எழுதிவைக்க உரிமை இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. ராமச்சந்திர கென்னடிக்கு உயிலில் கண்ட சொத்து எவ்வாறு கிடைத்தது என்று கேட்டால் மதுரை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நடந்த அசல் வழக்கு எண்.1001/1990ல் இடைக்கால மனு.117/1995ல் ஏற்பட்ட சமரசத்தின்படி பாத்தியப்பட்டது. அவ்வழக்கில் A schedule படி கிடைக்கப்பட்டது. (உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி சொத்தின் உரிமை குறித்து Probate நீதிமன்றத்தில் தீர்மானிக்க இயலாது. அது குறித்த கேள்விகள் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது). வா.சா.ஆ.2 உயிலில் சொத்து விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. (சொத்து விபர பட்டியல் அதில் இல்லை). வா.சா.ஆ.2 உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள 1வது சாட்சி யார் என்று கேட்டால் அவர் அனைவருக்கும் குடும்ப உறுப்பினர். அதில் கண்ட 2வது சாட்சி யார் என்று கேட்டால் அவரும் அனைவருக்கும் குடும்ப நண்பர். ரமேஷ்க்கு ராமச்சந்திர கென்னடியின் மாமா என்றும் சாட்சி விளக்கம் அளிக்கிறார். ராமச்சந்திர கென்னடி தன்

தாய்மாமா என்றும் சாட்சி விளக்கம் அளிக்கிறார். சாட்சிகள் குடும்ப உறுப்பினர்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றும், அந்த உயிலில் கண்ட சாட்சிகள் எனக்கு மட்டுமே வேண்டபட்டவர்கள் என்றும், மேற்படி சாட்சிகளை வைத்து இந்த உயிலை உற்பத்தி செய்துள்ளேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. ராமச்சந்திரகென்னடியை மேலாதிக்கம் (undue influence) செய்து மேற்படி உயில் எழுதி வாங்கப்பட்டுள்ளது. என்று சொன்னால் அது சரியல்ல. 28.06.2007 ம் தேதி ராமச்சந்திரகென்னடியிடமிருந்து நான் சொத்து ஒன்றை கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். அது சம்பந்தமான கிரைய ஆவணத்தின் ஆன்லைன் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.06.2007 ம் தேதி ராமச்சந்திரகென்னடியிடமிருந்து மற்றொரு கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். அது சம்பந்தமான கிரைய ஆவணத்தின் ஆன்லைன் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.01.2008 ம் தேதி ராமச்சந்திரகென்னடியிடமிருந்து மற்றொரு கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். அது சம்பந்தமான கிரைய ஆவணத்தின் ஆன்லைன் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.01.2008 ம் தேதி கச்சகட்டி கிராமம் சர்வே எண்.1598/11B சர்வே எண்.1600/2, சர்வே எண்.1601/4A மற்றும் சர்வே எண்.1601/4C ராமச்சந்திரகென்னடியிடமிருந்து மற்றொரு கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். ராமச்சந்திரகென்னடி 11.01.2008 ம் தேதி கிரைய ரத்து பத்திரம் ஒன்று எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். இம்மனு தாக்கல் தேதியில் ராமச்சந்திரகென்னடிக்கு சொத்து எதுவும் இல்லை என்றும், அவருடைய சொத்துக்கள் அனைத்தையும் எனக்கு ஏற்கனவே

கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் 11.01.2008 ம் தேதி கிரைய ரத்து பத்திரத்தில் ஒரு சொத்து கட்டுப்பட்டது. ராமச்சந்திரகென்னடிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், அதனால் இந்த மனு நிலைநிற்கதக்கதல்ல என்றும் சொன்னால் அது சரியல்ல. கிரையம் பற்றிய விபரத்தை எனது மனுவில் மறைத்துள்ளேன் என்று சொன்னால் சொல்லவில்லை. ராமச்சந்திரகென்னடிக்கு எந்த சொத்து பாத்தியப்பட்டது என்று மனுவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் அந்த சொத்துக்கள் கட்டுப்பட்டது. Probate OP ல் சொத்து பட்டியல் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிடப்படவில்லை. ராமச்சந்திரகென்னடிக்கு என்று சொத்து எதுவும் இல்லை என்றும், இம்மனு தள்ளுபடி செய்யதக்கது என்றும் சொன்னால் அது சரியல்ல.

Sd/- காந்தி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN

Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.10.25 10:40:29 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.